Article 9 of the United Nations Convention on Rights of Persons with Disabilities states:

**Article 9**
**Accessibility**

1. To enable persons with disabilities to live independently and participate fully in all aspects of life, States Parties shall take appropriate measures to ensure to persons with disabilities access, on an equal basis with others, to the physical environment, to transportation, to information and communications, including information and communications technologies and systems, and to other facilities and services open or provided to the public, both in urban and in rural areas. These measures, which shall include the identification and elimination of obstacles and barriers to accessibility, shall apply to, inter alia:

(a) Buildings, roads, transportation and other indoor and outdoor facilities, including schools, housing, medical facilities and workplaces;

(b) Information, communications and other services, including electronic services and emergency services.

2. States Parties shall also take appropriate measures:

(a) To develop, promulgate and monitor the implementation of minimum standards and guidelines for the accessibility of facilities and services open or provided to the public;

(b) To ensure that private entities that offer facilities and services which are open or provided to the public take into account all aspects of accessibility for persons with disabilities;

(c) To provide training for stakeholders on accessibility issues facing persons with disabilities;

(d) To provide in buildings open to the public signage in Braille and in easy to read and understand forms;

(e) To provide forms of live assistance and intermediaries, including guides, readers and professional sign language interpreters, to facilitate accessibility to buildings and other facilities open to the public;

(f) To promote other appropriate forms of assistance and support to persons with disabilities to ensure their access to information;

(g) To promote access for persons with disabilities to new information and communications technologies and systems, including the Internet;

(h) To promote the design, development, production and distribution of accessible information and communications technologies and systems at an early stage, so that these technologies and systems become accessible at minimum cost.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுகுத்தன்மையில் மாற்றுவலுவுள்ளோருக்கான பிரச்சனைகளும் தடைகளும்

சுகாதாரம், கல்வி, தொழில் ஆகியவற்றைப் பெறுதல் அடிப்படை மனித உரிமைகளாகும். ஆனால் நடைமுறையில் வலுவிழந்தோர் கட்டிடங்களையோ காரியாலயங்களையோ அணுகுவதில் சமூகத்தின் எதிர்மறை மனப்பாங்கு, சமூக வழிப்புணர்வின்மை ஆகிய பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றார்கள். இதனால் இவர்கள் சமூகத்திலிருந்து ஒரம் கட்டப்படுகிறார்கள். அணுகு வசதிகள் வலது குறைந்தவர்களுக்கு மட்டுமல்லாமல் உடற் குறைவு, மனக் குறைவு, கால் கையில் காயம், முறிவு ஏற்பட்டவர்கள், முதியவர்கள், பிள்ளையை வண்டி லில் வைத்துத் தள்ளும் தாய்மார்கள், சிறு பிள்ளை கள், கர்ப்பிணித் தாய்மார்க்கள் பெரிய பாரத்தைச் சுமந்து செல்பவர்கள் எல்லோருக்கும் பயனளிக்கும். ஆகவே இவர்களுக்குக் கட்டிடங்களில் ஏறி இறங்கு வதற்கும் உள்ளே நடமாடு வதற்கும் போக்குவரத்து வாகனங் களில் ஏறி இறங்குவதற்கும் வசதிகள் அமைக்கபட வேண்டும். 2006ஆம் ஆண்டில் வெளிவந்த வர்த்தமானியில் முதலாம் எண் சட்டம். வலது குறைந்த வர்களுக்கேற்க அணுகு வசதிகள் அமைக்கப்பட வேண்டுமென்று வெளி யிடப்பட்டது. இது வெளிவந்து 09 ஆண்டுகள் சென்றும் அணுகுத்தன்மையிலுள்ள குறைகள் நீங்க வில்லை.

பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் சென்று கல்வியைப் பெறுவதி லுள்ள தடைகள் நீங்காத தாலும் இப் பிள்ளைகள் கல்வியில் பின்தங்குகிறார் கள். வளர்ந்தோர் தொழில் தேடிப் போகவோ, தொழிலுக்குச் செல்லவோ அணுகுமுறை வசதிகள் இல்லாததால் மலர்ச்சியான இயற்கை வளங்களைப் பார்க்கவோ உறவினர், நண்பர் வீடுகளுக்குச் செல்லவோ முடியாதுள்ளது.

சமூகசேவை அமைச்சு இதை யொட்டி பல இடங்களில் பல தடவைகள் விழிப்புணர்வு நிகழ்சி கள் நடாத்தியுள்ளது. பத்து மாவட்டங்களில் தொழில் நுட்பவியலாளருக்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள் ளது. யாழ்ப்பாணத்திலுள்ள ஜெய்ப்பூர் வலுவிழந் தோர் புனர்வாழ்வு நிறுவனம் எம்முடன் சேர்ந்து திறமையாகச் செயற்படு கிறது. இதன் விளைவை புதிய கட்டிடங்களில் பார்க்க முடிகின்றது. செவிப் புலன் அற்றோருக்கு உதவி செய்ய அவர்களுடன் கை அசைவினால் உரையாடக்கூடிய ஆசிரியர் களோ, உத்தியோகத்தர்களோ பற்றாக்குறையாக வுள்ளது. மேலும் பார்வை குன்றியவர்களுக்கு அல்லது பார்வையில்லாதவர்களுக்கு போதியளவு பிறேயில் நூல்கள் இல்லலை. இவர்களுக்குக் கதைக்கும் புத்தகம் (Daisy) உதவியகா இருக்கும்.

தற்போது அணுகுத்தன்மை வசதிகளி லிருந்து எங்கும் எல்லோர்க்கும் பொது வான கோட்பாடுகள் அடங்கிய வடிவ மைப்பையே உலகம் கருத்திற் கொண்டுள்ளது. இந்த வடிவமைப்பில் குறிக்கப்பட்ட கோட்பாடுகளா வன.

01. எல்லோருக்கும் சமமான பாவனை

02. இலகுவாக மாற்றியமைக்கக்கூடிய வடிவ மைப்பு

03. எளிமையானதும் உள்ளுணர் வால் ஆக்கப் படுவதும்

04. இலேசாக உள்வாங்கக்கூடிய அறிவித்தல்கள்

05. பிழைகளைச் சகிக்கும் தன்மை

06. குறைந்தளவு தேக சக்தியைப் பாவிப்பது

07. ஒரளவு விரிசலான நுழை வாயில்களும் நடமாடும் பாதைகளும்

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் வலுகுறைந்தோர்க் கென தயாரித்த பிரகடனத்தில் சிறீலங்காவும் கையொப்பமிட்டுள்ளது.

*(வலது குறைந்தோருக்கான சிறீலங்கா தேசிய சபை அங்கங்கதவர் திரு. சிறில். சிறிவர்த்தனா (Mr. Cyril Siriwardena) சிறீலங்கா வலுகுறைந்தோர் புனர் வாழ்வு அமைப்பின் தலைவர். ஆங்கிலக் கட்டுரையை யாழ். ஜெயப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் தமிழாக்கம் செய்துள்ளது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருத்தியில் பின்னடைவான குழந்தைகள்

**Dr. (Mrs) Gitanjali Sathiadas, DCH, MD(PAED), MRCPCH,**
Consultant Paediatrician, University Paediatric Unit,
Teaching Hospital, Jaffna.

மூளை வளர்சி குன்றிய அல்லது செரிபரல் போல்ரி (Cerebral Palsy) எனப்படும் நோய் விருத்தியடையும் மூளையில் ஏற்படும் தாக்கத்தினால் உடற் செயற் பாட்டில் ஒரு பின்னடைவாகும். இந் நோய் ஒரு குழந்தை பிறக்கும் முன், பிறக்கும் போது அல்லது பிறந்த பின்பு ஏற்படும் அசாதாரண சூழ்நிலைகளின் தாக்கத்தால் ஏற்படுகின்றது. மூளையில் ஏற்படும் இத்தாக்கம் குழந்தைபிறக்கு முன் தொடக்கம் 3-5 வயது வரையான காலப்பகுதியின் போதே உருவாகின்றது. விருத்தி அடைந்த நாடுகளில் இந்நோயை 1000 த்தில் 2-3.5 வீதமான குழந்தைகளில் காணப் படுகிறது.

இது அதி நிறை குறைந்த குழந்தைகளிலும் குறைமாத பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகளிலும் கூடுதலாக காணப்படுகிறது. பிறந்தவுடன் மூளையின் குருதிச் சுற்றோட் டத்தில் பாதிப்பு ஏற்படும் குழந்தைகள். பிறந்ததிலிருந்து 3- 5 வயதுவரையான காலப பகுதிகளில் மூளைக்காய்ச்சல் ஏற்பட்டிருப்பின் பிறந்தவுடன் ஏற்படும் வலிப்பு அதிகூடிய மஞ்சட்காமாலை செப்பிசீமியா போன்ற நோய் தாக்கம் ஏற்பட்டிருப் பின் இந்நோய் ஏற்படுகின்றது. இதனால் உடற் தசைகளின் தொழிற்பாடு, ஒருங்கிணைந்த செயற்பாடு (Coordination) உடலின் அமைப்பு (posture) சமநிலை (balance) என்பனவற்றில் பாதிப்புக்கள் ஏற்படலாம். இவ்வாறான பிரச்சினைகள் ஒவ்வொரு குழந்தைக்கும் வேறுபட்டவையாக காணப்படும். இதை விடவலிப்பு கண் பார்வை குறைபாடுகள், கேட்டல் அல்லது பேச்சுத் திறன் குறைபாடுகளும் இந்நோயுடன் சேர்ந்து காணப்படும். கற்றலிலும் பின்னடைவை ஏற்படுத்தும்.

இந்த நோய் ஒருஉயிராபத்து இல்லாத ஒரு நோய். இந் நோயை குணமாக்கமுடியாது: மூளையில் ஏற்படும் தாக்கம் காரணமாகஏற்படுவதால் இதை குணமாக்கமுடியாது. முறையான உடற் பயற்சியின் மூலம் இதனால் ஏற்படும் விளைவுகளை கட்டுப்படுத்த லாம்.இது நிரந்தரமாக வாழ்நாள் முழுவதும் இருக்கும் ஒருநோய் மற்றைய உறுப்புக்களில் தாக்கம் ஏற்படின் அது முற்றாக மாறும். ஆனால் மூளையில் ஏற்படும் தாக் கத்தை குணமாக்க முடியாது. விருத்தி அடையும் மூளையில் ஏற்படும் தாக்கம் ஆதலால் இது ஒரு பிள்ளையிடமிருந்து இன்னொரு பிள்ளைக்கோ வேறொருவருக்கோ தொற்றாது. இது கட்டுப்படுத்தக் கூடியநோய்: உடற்பயிற்சி, மருந்துகள், சத்திர சிகிச்சைமற்றும் உபகரணங்களை கிரமமான முறையில் உபயோசிப்பதன் மூலம் இதைக் கட்டுப்படுத்தலாம்.

காலம் தாழ்த்தாதுகண்டுபிடித்தல் மூலமும், காலம் தாழ்த்தாது பயிற்சி செயற்பாடுகளினாலும் இந்நோயை கட்டுப்படுத்தமுடியும். இந்நோய் முற் கூட்டியே அறிய முடியும். இதற்கு பெற்றோர் வைத்தியர் கள், குழந்தைகளை பராமரிப்பவர்கள் மிக அவதான மாக இருக்கவேண்டும். குழந்தைகளின் சில செயற்பாடு களை அவதானிப்பதன் மூலம் முற்கூட்டி இந் நோயை கண்டுபிடிக் கலாம். உதாரணமாக ஆறு மாத அளவில் கைகால் இறுக்கமாக இருப்பின், பொருட் களை கையை நீட்டி எடுக்காதிருத்தல், குரல் எழுப்பாதிருத்ல் , சிரிக்காதிருத்தல் போன்றன சில அறிகுறிகளாகும். ஒன்றரை வயதில் நடக்க முடியா திருத்தல, பெயர் கூறும் போது திரும்பிபாரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தல், கதைக்க முடியாதிருத்தல் போன்ற சில குணங்குறிகள் இருப்பின் வைத்திய உத விியை நாடவேண்டும்.

**செய்யவேண்டிய சிகிச்சைப்படிகள்**

சிகிச்சை ஒருவரால் மட்டும் வழங்கமுடியாது. பலசெயற்பாடுகளில் தேர்ச்சி பெற்ற ஒரு குழுவினால் பயிற்சி அளிப்பதன் மூலம் சாதாரண நிலைக்கு கொண்டு வரலாம். இக் குழுவில் வைத்தியர் பிரதான பங்கை வகிக்க வேண்டும் மற்றும் உடற்பயிற்சி, செய் முறை பயிற்சி, பேச்சுத் திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சி எனபலவகைப்படும். உடல் விருத்தியை ஊக்கப்படுத்துதல், உடல் செயல்முறை ஊக்குவித்தல், மருத்துவசிகிச்சைஅளித்தல்
உ.ம்:

வலிப்பு. தசை இறுக்கம், பேச்சுத் திறனை ஊக்குவித்தல், சமுகவிருத்தியை ஊக்குவித்தல், அறிவுவிருத்தியை ஊக்குவித்தல், உளவளத் துணையை அதிகரித்தல் போன்ற பலவகைப்படும்.

**அறிவுவிருத்தியைமேம்படுத்துதல்**

இது வயது வந்தவர்களுடனான தொடர்புகள் விளைவாகவும், ஓசைகளை கேட்பதாலும் நிகழ்வு களை பார்ப்பதாலும் மற்றும் பலகாரியங்களை உணர்ந்து கொள்வதன் விளைவாகவும் ஏற்படுகிறது. கண்பார்வை, கேட்டல், பேச்சுத்திறன் என்பவற்றின் பின்னடைவு இருப்பின் அறிவுவிருத்தியில் பின்னடைவு எற்படலாம். அவ்வாறாயின் வைத்திய ஆலோசனை பெறவேண்டும்.

**உணர்வுகளைத்தூண்டுதல்**

அறிவுவிருத்தியை மேம்படுத்து வதற்கு இது மிகஅவசியமானது. குழந்தைகள் தாம் பிறந்த நாளிலிருந்தே பார்த்தல், கேட்டல், உணர்தல், சுவைத்தல் மற்றும் மணந்துபார்த்தல் ஆகிய தமது புலன்களின் வாயிலாக உலகை பற்றிய தகவல்களை உள்ளெடுக்கின்றனர்.

விருத்தியில் பின்னடைவான குழந்தை களிற்கான சிகிச்சை முறைகள் விருத்தியடைந்த நாடுகளில் முன்னேற்றங்களைகண்டுள்ளது. ஆனால் இலங்கை போன்ற விருத்தியடைந்து வரும் நாடுகளில் சிகிச்சை முறைகள் பின் தங்கியதாகவே இருக்கின்றன. நமது பிரதேசத்திலும் முறையான சிகிச்சை முறைகளை தற்போது யாழ் ஜெய்பூர் நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்படுகின்றது.

அதின உணவு மந்த புத்தியைத் தரும்
உணவுக் கட்டுப்பாடு மிகவும் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊடகவியலாளரின் பார்வையில்

# யாழ். ஜெய்பூர் புனர்வாழ்வு நிறுவனம்

*எஸ் .யேசுதாஸ்*
ஊடக எழுத்தாளர்.

இறைவனால் படைக்கப்பட்ட மனிதப் பிறவியில் சராசரி மனிதனுக் குரிய உடல், உள, ஆற்றல், ஆளுமை, பகுத்தறிவுத் திறன்களுக்குக் குறைவான வலுக்கொண்டோரை வலுவிழந்தோர் , மாற்றுத்திறனானாளிகள், விசேட தேவையுடை யோர் எனப் பல சொற்பதங்களில் அழைக்கின் றோம். அவ்வகை குறைபாடுகள் இயற்கையாகவும், விபத்துக்கள், நோய்களாலும் ஏற்பட்டு பலரது வாழ்வை சூனியமாக்கி முடக்கி விடுகின்றன.

இவ்வாறு பாதிக்கப்பட்டோர் தங்களுக்குத் தாமே எல்லைக்கோடுகளைக் வகுத்து ஒதுங்கி மன விரக்தியுடன் காலத்ததைக் கரைத்தனர். சமூகமும் அவர்களை பயனற்றவர்கள், வேண்டாதவர்கள், தீண்டத்தகாதவர்கள் எனத் தள்ளிவைத்த வரலாறு கள் மூன்று சதாப்பதங்களுக்கு முன்னர் பரவலாகக் காணப்பட்டது. எவ்வித பராமரிப்போ, சிகிச்சையோ, வழிகாட்டல்களோ இன்றி பல்வேறு வடிவங்களில் பிறருக்கு ஏளனமானவர்களாகக் கணிக்கப்பட் டனர்.

எமது எதிர்காலம் சுபீட்சமாகுமா? நாமும் சமுதாயத்தில் ஓர் அம்சமாக, கௌரவமாக, சுய செயற் பாட்டுடன் வாழ முடியுமா? எமது எதிர் பார்ப்புக் கள் நிறைவேறாதா? என அங்கவீனமுற்றோர் ஏக்கத்துடன் வாழ்ந்தனர். எமது உறவுகளுக்கு ஏன் இந்த நிலை? இவர்கள் இயல்பு வாழ்வுக்கு திரும்ப வழி கிட்டுமா? வலுவிழந்தோரைக் கொண்ட வலுவற்ற பிரதேசமாக எமது பகுதி மாறிவிடுமா? என்ற கேள்விகள் மக்களின் உள்ளத்தை உறுத்தி நின்றது.

இந்த நிலையில் மனமுடைந்தோருக்கு நம்பிக்கை நட்சத்திரமாக, வாழ்வில் இருள் சூழ்ந்து பாதை தெரியாது தவித்தோருக்கு கலங்கரை விளக்காக யாழ். மண்ணில் உதயமாகியது. யாழ். ஜெய்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம். மகத்தான மனிதநேயப் பணியை ஆரம்பித்து 28 அண்டுகள் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி பல்லாயிரம் வலுவிழந்த மக்களுக்குத் தஞ்சமளித்து வலுவூட்டி, வாழ்வாதார நிழல் கொடுக்கும் பெரு விருட்சமாகத் திகழ்கின்றதென்றால் அது மிகையா காது. தொடராக ஏற்பட்ட இடர்கள், தடைகள், இழப்புக் களைத் கடந்து வந்த பாதையில் சந்தித்த போதும் இலக்கை அடையும் முயற்சியிலும், சமூகப்பணியில் கனதியிலும் எந்தவித தொய்வுமின்றி சமநோக்குத் தன்மையுடன் பயணிக்கும் இந் நிறுவனம் இம் மண்ணின் சொத்தாகும்.

உதவும் கரமாகிய ஜெயப்பூர் நிறுவனம் யாழ.மண்ணில் கால்கோள் கொண்டு வளர்சி பெற்று எழுச்சி யடைந்து முழுமூச்சுடன் பணியாற் றும் வரலாற்றுச் சுவடுகளை 28 ஆவது அகவை நிறைவின்போது ஊடகப் பார்வையின் பின்னணி யில் நோக்கு வோம்.

1980 களின் பின்னராக பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்தால் எறிகணைத் தாக்குதல்கள், விமானக்குண்டு வீச்சுக்கள், துப்பாக்கிச் சூடுகள், மிதிவெடித் தாக்கங்கள், உயிரிழப்புக்கள், மரண ஓலங்கள், யுத்த முனைப்புக்கள் போன்ற செய்தி களே பிரதான இடத்தைப் பிடித்துள்ளதைக் காண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிகின்றது. இந்த அசாதாரண நிலைமைகளால் அவயவங்களை இழப்போரின் வீதம் திடீரென அதிகரித்துள்ளதாகவும் அந்த செய்திகளில் கோடிடப் பட்டுள்ளது. போக்குவரத்துக் கெடுபிடிகள், உயி ருக்கு உத்தரவாதமற்ற காரணங் களால் கொழும்பு சென்று செயற்கை உறுப்புக்களைப் பொருத்துவது சாத்திய மற்றுக் காணப்பட்டது.

அந்தக் காலப்பகுதியில் இளைஞர் யுவதிகள் வகை தொகையின்றி கைது செய்யப்பட்டு சிறைக ளில் அடைக்கப்பட்டனர். அவர்களின் நலன்களைக் கவனிக்கவும் அவர்களுக்காக குரல் கொடுக்கவும் யாழ். அன்னையர் முன்னணி என்ற அமைப்பு செயற்பட்டு வந்தது. போராலும், பிற விளைவுகளா லும் அங்கங்களை இழப்போரின் அதிகரிப்பையும். துயரத்தையும் கண்ணுற்ற அன்னையர் முன்ன ணியினரின் தாயுள்ளம் துடிதுடித்தது.

பாதிக்கப்படுவோரின் புனர் வாழ்விற்கு செயற்கை உறுப்புக்களின் உற்பத்திக் கூடத்தை உள்ளூரிலே அமைப்பதே தீர்வாகும் என்பதை உணர்ந்து அந்நேரத்தில் கொழும்பில் செயற்கைப் பாதங்களைப் பொருத்தி வந்த கொழும்பு நட்புறவுச் சங்கம் மற்றும் தொண்டு அமைப்பான நோராட் நிறுவனம் என்பவற்றுடன் தொடர்புகொண்டு, ஏற்படுத்தப்பட்ட முகாமைத்துவக் குழவின் முயற்சி யால் 1986ஆம் ஆண்டு மார்கழி மாதம் 06ஆம் திகதி யாழ். வை. எம்.சீ.ஏ. மண்டபத்தில் அங்கு ராய்ப்பணம் இடம்பெற்றது. பல்வேறு துறைசார் புத்திஜீவிகள், கொடையாளர்கள், சிவில் அமைப்புக் கள் சமூகமளித்திருந்தன. செயற்கை மாற்று உறுப்புக்களின் அவசரத் தேவை அனைவராலும் வலியுறுத்தப்பட்டது, அதன் பயனாக, 1987ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15 ஆம் திகதி தற்போது இயங்கிவரும் வளாகத்தில் கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் செயலாளர் திருமதி சுவர்ணா பேர்டினன்ட் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

செயற்கைப் பாதங்களின் உற்பத்தியில் சிறந்து விழங்கிய இந் நதியாவின் ஜெயப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலையின் உற்பத்திகள் பிரபல்யமாக இருந்தது. இதனால் அங்கிருந்து தரு விக்கப்பட்ட பாதங்களைக் கொண்டு ஏனைய தொழில் முறையைப் பயன்படுத்தி சார்புறுப்புக்கள் தயாரிக்கப் பட்டமையாலும் ஜெயப்பூர் என்னும் நாமத்தையும் இணைத்து ஜெயப்பூர் வலுவிழந் தோர் புனர்வாழ்வு நிறுவனம் என பெயரிடப்பட்டது. ஆனால் இந்திய ஜெயப்பூர் நிறுவனத்திற்கும் இதற்கும் எவ்வித நிர்வாகத் தொடர்புகளும் கிடையாது. முற்றிலும் யாழ். அன்னையர் முன்னணியின் அங்கத்தவர்களே ஆரம்பகால நிர் வாகக் கட்டமைப்பில் இடம் பெற்றி ருந்தமை அன்றைய செய்திகளில் காணமுந்தது.

'சாணேற முழும் சறுக்குவது போல' ஆரம் பித்து நான்கு மாதங்களில் இந்திய அமைதிப்படை யின் வருகையின் பின் 1987ஆம் ஆண்டு ஐப்பசியில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் செயற்பாதடுகள் முடங்கின. மூலப்பொருள்கள் எடுத்து வருவதில் சிரமங்கள், மறைமுகப் பொருளா தாரத் தடைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

காலத்தின் தேவையறிந்து இரக்க சிந்தையுட னும் தூர நோக்குடனும் ஆரம்பிக்கப்பட்ட இந் நிறுவனம் காலத்துக்குக் காலம் இடம்பெற்ற போர்ச் சூழல் இடப்பெயர்வுகளால் பெரிதும் பாதிப்புக்குள்ளா னது. 1989, 1990, 1995, 2000 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட தீவிர யுத்த நிலையினால் கட்டட சேதங்கள், சொத்திழப்புக்களைத் தொடராகச் சந்தித்தது. இடம் பெயர்நது தென்மராட்சியில் பணியாற்றிய 1996 காலப்பகுதிகளில் மீண்டும் இயந்திரங்கள், மூலப் பொருட்கள், உபகரணங்கள் சூறையாடப்பட்ட நிலையில் வெறுமையுடன் யாழ்நகர் திரும்பி வந்தது. இடம் பெயர்ந்த இடங்களிலும் வாழாதிருக்க வில்லை. இருப்பதைக் கொண்டு உள்ளூர் வளங்க ளைப் பயன்படுத்தி பயனாளிகளுக்குத் தேவை யான உதவிகளை அர்ப்பணிப்புடன் வழங்கி வந்தது.

வெளிநாடுகளில் பயிற்சி பெற்ற பணியாளர்க ளின் புதிய தொழில் நுட்பங்களும், ஊக்கமும், விவேகமும், தலைமைத்துவக் கட்டமைப்பின் ஆலோசனையும், செயற்பாட்டுச் சுதந்திரமும், உடன் ஊழியர்களின் அயராத உழைப்பும் மீண்டும் மீண்டும் பீனிக்ஸ் பறைவைபோல மேல் எழுந்து பணி யாற்ற உத்வேகம் அளித்து நின்றது. இங்கு பணியாற்றும் அநேகர் மாற்றுத் திறனாளிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

2003ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஏற்பட்ட சூழமைவு மாற்றங்களைத் தொடர்ந்து படிப்படியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனத்தின் செயற்பாடுகள் வளர்ச்சியடைந்து விரிவு பெறத் தொடங்கியது. சர்வதேச, உள்ளூர் தொண்டு நிறுவனங்கள், புலம்பெயர் மற்றும் உள் நாட்டுப் பரோபகாரிகளனின் நிதியுதவிகளைப் பெற்று இன மத அரசியல் பேதமின்றி சேவையாற்றும் மனிதாபிமான நிறுவனமாகத் திகழ்கிறது.

வலுவிழந்த மக்களோடு உறவாடி, உடல், உள வடுக்களைக் களைந்து வழமை நிலைக்கு மாற்றுவ தென்பது இலகுவான காரியமல்ல. முதலில் அவர்கள்மீது கரிசனை காட்டி, தன் நம்பிக்கையூட்டி உயர்வுக்கு ஊனம் ஒரு தடையல்ல உள்ளத்தில் உறுதி கொண்டால் எதையும் சாதிக்கலாமென இங்குள்ள தலைமையும், ஊழியர்களும் தமது கனிவான வார்த்தைகள் வழியாக பயனாளிகளுக்கு திடமளிக்கின்றார்கள். அன்பு, அரவணைப்பு, பரிவு, ஆறுதல் மொழிகள் என்பன மருத்துவ சிகிச் சையை விட மன உடைவுகளை ஆற்றும் வலு மிக்க ஔடதமாகும் என்பதை இவர்களின் அணுகு முறைகள் வெளிப் படுத்துகின்றன. நீண்ட காலமாக ஜெய்ப்பூர் நிறுவனத்துடன் நான் கொண்டுள்ள தொடர்பாடல்கள் மூலம் பலமுறை இதை நேரில் கண்டு அனுபவித்துள்ளேன்.

28 வருடகால அனுபவங்களைக் கொண்ட இந்நிறுவனத்தில் சர்வதேச தரத்திற்கு ஈடாக நவீன தொழில் நுட்பங் களைக் கொண்டு அவயவங்கள் உருவாக்கப்படுகின்றன. இதுவரை 6527 பயனாளிகளுக்கு செயற்கைக் கால்களும் 267 பயனாளிகளுக்கு செயற்கைக் கைகளும் பொருத்தப்பட்டுள்ளன. அத்துடன் குறைபாட்டு நிவர்த்தி உறுப்பு உற்பத்தி, நடமாடும் உபகரண உற்பத்தி, அவயவத் திருத்த வேலைகள் என்பனவும் மேற்கொள்ளப் படுகின்றது.

மேலும் உளவளச் சேவை, இயன்மருத்துவ சேவை, என்பு முறிவு நெறிவு வைத்திய சேவை, சமூக விழிப்புணர்ச்சி, பொரளாதார மேம்பாடு, வைத்தியசாலைச் சேவை, வெளிக்கள புனர்வாழ்வுச் சேவைகள் போன்ற இன்னோரன்ன செயற்திட்டங்களை நடை முறைப்படுத்தி வருவதுடன் மூளை முடக்கு வாதம் உள்ள சிறுவர்களுக்கான வைத்திய சேவையையும் ஆரம்பித்துள்ளது. செரிபரல் பால்சி லங்கா பௌடண்டேசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் விசேட மருத்துவ முகாம் நடாத்தி மூளை முடக்குவாதமுள்ள 143 சிறுவர்களுக்கு சக்கரநாற்காலிகள் வழங்கி அவர்கள் வாழ்வுரிமைக்கு உறுதுணை புரிந்துள்ளது.

வலுவிழந்தோர் இரண்டாந்தரப் பிரஜைகள் அல்ல அனைத்துத் துறைசார் செயற்பாடுகளிலும் சம அந்தஸ் திற்கு உரியவர்கள் என்பதை நிரூபிக்கும் பல நடவடிக்கைகளை இந் நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது. அவர்களின் ஆற்றல்கள், திறமைகளை வெளிக் கொணர்ந்து மகிழ்வூட்டும் வண்ணம் வருடாந்தம் விளையாட்டுப் போட்டிகள், கலைநிகழ்வுகளை நடாத்தி அவர்கள் பால் சமூகத்தின் கவனத்தை ஈர்ந்து வருகின்றது.

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் தொடர்பான பிரசுரம் ஆரம்ப காலங்களில் மந்தமாக இருந்துள்ள போதிலும் காலப்போக்கில் ஊடகப் பயன்பாட்டினையும், ஊடகங்களின் பார்வையையும் விரிவுபடுத்தி பாதிக்கப்பட்டோருக்கு தன்னை அடையாளப்படுத்தி வருகின்றது. iicdr.com என்ற இணையதளம் மூலமாகவும், உள்நாட்டுப் பத்திரிகை கள், சஞ்சிகை வெளியீடு, துண்டுப் பிரசுரங்கள், தொலைக் காட்சிகள், கருத் தரங்கு தொடர்பாடல்கள், விழாகள், விளையாட்டுப்போட்டிகள் வழியாகவும் பயனாளிகளையும் சமூகத்தையும் திரும்பிப் பார்க்க வைக்கின்றது.

செயற்கை மாற்றுறுப்புக்கள் உற்பத்தியிலும், வலுவிழந்தோர் மேம்பாட்டிலும், வடபுலத்தில் முன்னோடியாகத் திகழும் யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் தேவைக்கும், சேவைக்கும் அளவு கோலாக பயனாளிகள் தொடர்பான வரைபடம் சான்று பகர்கின்றது. யுத்தம் தீவிரமடைந்த காலப் பகுதிகளில் நாடிவரும் பயனாளிகளின் தொகை அதிகரித்துச் செல்வதைக் காணலாம். இறுதி யுத்தம் நடைபெற்ற 2009ஆம் ஆண்டிற்கும் பின்னரான காலப்பகுதியில் பயனாளிகள் வருகை மேலும் திடீரென அதிகரித்ததை உணர முடிகின்றது.

இவ்வாறு வலுவிழந்தோருக்கு வரப்பிரசாதமாக விளங்கும் ஜெய்பூர் நிறுவனத்தின் உயர்வுக்கும், சமூக நலத்தொண்டிற்கும் அதன் நற் சாரதிகளாகத் திகழும் நிர்வாக கட்டமைப்பு பாராட்டப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியதாகும். ஆண்களால் நிர்வகிக்கப்படும் நிறுவனங்களே தடம்புரளும் போது முற்றிலும் முற்றிலும் பெண் புத்திஜீவிகளை நிர்வாக முகாமைத் துவ தலைமையாகக் கொண்டு 28 வருடம் வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருப்பது ஆச்சரியமூட்டும் செய்தியாகும். அவர்களின் அமைதியும், தன்னடக்க மும், எழிமையும், பிறரன் புமே சான்றாகும். ஆரமப காலம் முதல் இன்றுவரை ஜெய்ப்பூரோடு தமது வாழ் நாளை சங்கமமாக்கிக் கொண்ட தலைவர் மருத்து வக்கலாநிதி கௌரவ திருமதி ஜெ. கணேசமூர்த்தி, பொருளாளர் மருத்துவக் கலாநிதி திருமதி எஸ். தெய்வேந்திரன் ஆகியோரின் அர்ப்பணிப்பு உயர் வானது.

உலகில் ஆறு வினாடிக்கு ஒரு விபத்து இடம்பெறுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும் நீரிழிவு, யுத்தங்கள், கூரிய ஆயத பாவகைள், தசைகள் அழுகும் நிலை போன்ற காரணங்களாலும் அங்கங்களை இழப்போர் வீதம் அதிகரித்துச் செல்லும் இக் காலத்தில் ஜெயப்பூர் நிறுவனத்தின் இருப்பு பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாகின்றது. மேலும் பொருத்தப்படும் அவயவங் கள் மற்றும் சார்புறுப் புக்கள் தேய்பளவு பயனாளிக ளின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு 1-2 வருடங்களுக் கொரு முறை மாற்றப்பட வேண்டியுள்ளதுடன், உதவிகளும் வழி காட்டல்களும் தொடர் சேவை யாக தேவைப்படுகின்றன. எனவே பயனாளி உள்ள வரை யாழ். ஜெயப்பூர் நிறுவனத்தின் மனித நேயப் பணிகள் தொடர வேண்டியுள்ளது அவசியமாகின் றது.

இந்நிறுவனம் நீண்டு நிலைத்து எம் மண்ணில் சேவையாற்ற பொருளாதார பலம் இன்றி யமையாததாகும். வெறுமனே அரச தொண்டு நிறுவனங் களின் உதவிகளால் மட்டும் ஈடு செய் முடியாது. நிதிவளம் மிக்க பரோபகாரிகள், வர்த்தகர்கள், மதசார் அமைப்புகள், பொதுமக்கள் வழங்கும் தாராள உதவிக ளும், ஆலோசனை களும், விழிப்புணர்வுமே காக்கும் கவசமாக அமையும். இந் நிறுவனத்தின் பணி போற்றதற் குரியது. என்றும் நினைவு கூரப்படவேண்டியது. இறை பணிக்கு ஒப்பானது. கால் கொடுக்கும் யாழ். ஜெய்ப்பூருக்கு கை கொடுக்க அனைவரும் அணி திரள்வோம்.

'வாழ்க ஜெய்ப்பூர் ! வலுவிழந்தோர் வாழ்வு வளம் பெறட்டும்'

"எதனாலும் சாதிக்க முடியாததை பொறுமையால் எளிதாக சாதித்துவிட முடியும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A tribute to ICRC for services rendered by them to SriLanka particularly in relation to Northern Province

**Dr. R. Theivendran, Advisor, JJCDR**

**Former**
**Chairman SLRCS Northern Region**
**Director of Regional Health Training Centre**
**MO MCH, Jaffna, Tellipalai**
**Dy PDHS, Jaffna**

ICRC office in Jaffna is being closed with end of February 2011. On this occasion it will be necessary to have on record how the Jaffna office was opened in 1989 and the services it rendered to the population in Jaffna in saving lives and making the people tide over a very difficult situation up to now.

I was the chairman of the Sri Lanka Red Cross Society Jaffna division from 1987 which covered the entire Northern Province. Indian Peace Keeping Forces were in the North and the Indian Red Cross from 1987.League of Red Cross / Red Crescent Society was in Sri Lanka and had activities with Sri Lanka Red Cross Society in Jaffna helping the community in health and health related activities. In mid 1989 the situation in Jaffna was changing and it was realized by the then league delegate Mr. Ussitalo and SLRCS that if a war situation develops we will have to get the help of ICRC to be in Jaffna in saving lives and preventing injury and pain. At that time ICRC was in Srilanka at the request of the then president Mr. Premadasa. At the request of league delegate and myself on behalf of the SLRCS, Mr. Philip Contessa Head of Delegation ICRC Colombo met the then president His Excellency Premadasa and he was persuaded to give permission to open a sub delegation office in Jaffna in March 1990.

The presence of ICRC in Coordination with the SLRCS Jaffna branch resulted in saving many lives and trauma to people when war began May 1990. The war situation that developed in June 1990 would have been catastrophic to the people of Jaffna peninsula if not for the presence of the ICRC sub delegation. The quality and the dedication of the ICRC heads of sub delegation and officials attached to the Jaffna office had been excellent and they ensured that the Geneva Conventions were followed by the warring parties.

During my tenure of my office Mr. Freddy and Mr. George head of sub delegation and the medical delegates did excellent work in coordination with SLRCS in ensuring the safety of the population. These acts of the ICRC delegation will be remembered by all of us who understood their role well played during the war to save innocent lives up to the end of the war in May 2009. The role played by ICRC in terms of the Geneva Convention will be remembered with gratitude by the people of the North.

Finally in the postwar rehabilitation programme of the war injured population in association with the Jaffna Jaipur Centre for Disability Rehabilitation. I was associated with the Jaipur centre since the centre was started in Jaffna 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ICRC office in Jaffna is being closed with end of February 2011. On this occasion it will be necessary to have on record how the Jaffna office was opened in 1989 and the services it rendered to the population in Jaffna in saving lives and making the people tide over a very difficult situation up to now.

I was the chairman of the Sri Lanka Red Cross Society Jaffna division from 1987 which covered the entire Northern Province. Indian Peace Keeping Forces were in the North and the Indian Red Cross from 1987.League of Red Cross / Red Crescent Society was in Sri Lanka and had activities with Sri Lanka Red Cross Society in Jaffna helping the community in health and health related activities. In mid 1989 the situation in Jaffna was changing and it was realized by the then league delegate Mr. Ussitalo and SLRCS that if a war situation develops we will have to get the help of ICRC to be in Jaffna in saving lives and preventing injury and pain. At that time ICRC was in Srilanka at the request of the then president Mr. Premadasa. At the request of league delegate and myself on behalf of the SLRCS, Mr. Philip Contessa Head of Delegation ICRC Colombo met the then president His Excellency Premadasa and he was persuaded to give permission to open a sub delegation office in Jaffna in March 1990.

The presence of ICRC in Coordination with the SLRCS Jaffna branch resulted in saving many lives and trauma to people when war began May 1990. The war situation that developed in June 1990 would have been catastrophic to the people of Jaffna peninsula if not for the presence of the ICRC sub delegation. The quality and the dedication of the ICRC heads of sub delegation and officials attached to the Jaffna office had been excellent and they ensured that the Geneva Conventions were followed by the warring parties.

During my tenure of my office Mr. Freddy and Mr. George head of sub delegation and the medical delegates did excellent work in coordination with SLRCS in ensuring the safety of the population. These acts of the ICRC delegation will be remembered by all of us who understood their role well played during the war to save innocent lives up to the end of the war in May 2009. The role played by ICRC in terms of the Geneva Convention will be remembered with gratitude by the people of the North.

**"Jesus was a person**
**Whose only joy**
**Was spreading divine love**
**Offering divine love**
**Receving divine love"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலுவிழந்தோருக்கான தாதிய சேவையினூடான சிறந்த பராமரிப்புூமரிப்பு

செல்வி ர. வல்லிபுரநாதன்,
அதிபர், தாதியர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

"ஊனம் " "இயலாத்தன்மை" "வலு இழப்பு" என்பது ஒருவருடைய வாழ்க்கைக்காலத்தில் ஏற்படலாம். அல்லது பிறப்பிலேயே இருக்கலாம். இது தனிப்பட்டவரோடு மட்டுமே தொடர்புடைய தாகக் கருதக்கூடும். இதனால் அத் தனிப்பட்டவரை எவ்வாறு சிறப்பாகச் செயல்பட வைக்கமுடியும் என்பது குறித்து கவனம் செலுத்தப்படுகின்றது. இந்த நோக்குடன் உருவானது தான் ஜெயப்பூர் நிறுவனம். மாற்றாக வலுவிழந்தோர் தொடர்பில் மக்களுக் கும் அவர்களுடைய சூழல், சமூகம் என்பவற்றுக்குமான தொடர்புகளுக்கு முதன்மை அளிக்கக் கூடும். இதற்காக உருவானது தான் "தாதியம்". அம்மை புளோரன்ஸ் நைற்றிங்கேல் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட தாதியத் தில் ஆரம்பத்தில் எதிர்ப்புக்களையும், இன்னல்களை யும் சந்திக்கக்கூடியதாக இருந்த போதிலும் அத்தனையும் தகர்த்தெறிந்து தனது அளப்பரிய சேவையினூடாக முற்றுமுழுதாக அடித்தளமாய் மாற்றிய பெருமை அன்னையையே சார்ந்தது. அவர் வழிவந்த தாதியரும் தம் சேவைகளை இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றனர். இருப்பினும் தாதியம் என்பது பாராமரிப்பின் எல்லையானது என்பது உறுதிப்படுத்தப்படும் வகையில் அன்றைய கால போரின்போது வலுவிழந்தோரின் கவனிப்பும், அவர்களுக்கான உடல், உள, சமூக நலன்களுக்கான தேவைகளும் தாதியமூடாக பூர்த்தி செய்யப்பட்டன. இதுபோலவே இன்றைய காலகட்டங்களிலும் படிப்படியாக முன் னேறி பல்வேறு கல்வித தகைமை களையும், ஆளுமை முகாமைத்துவங்களையும், அனுபவ சாலிகளையும் தாதியத்துறை கொண்டுள்ளது. இருப்பினும் தாதியம் என்பது நோயினால் வாடும் மனிதனை ஆறதல்படுத்தி தொடர்ந்து செல்வதன் மூலம் வளமான வாழ்க்கையை ஏற்படுத்துவதே ஆகும். சுகபோகங்களில் வாழும் மனிதன் தன்னுடைய பிணி நிலையினை துளியேனும் எண்ணியிருந்திருக்கமாட்டான். அத்தகைய ஒருவன் மாற்றமுடியாத இயலாமை நிலைக்கு உள்ளாகும் போது அவர்களின் வாழ்நாள் முடிவடையும் தறுவாயிலும் தக்க பராமரிப்பினை தாதியர் தமது தாதியமூடாக வழங்கிக் கொண்டிருக் கின்றனர். அதாவது, பௌதிக ரீதியான தூய்மைப் படுத்தலும், புற அழகினைப் பேணுதல், அன்றாட நடவடிக்கை களை ஒழுங்கு படுத்தல், சாதனங்கள் பாவித்து நடமாட உதவுதல், உடற்பயிற்சிகளை கற்றுக் தருதல், நாளாந்த தேவைகளை சரிவர மேற்கொள்ள விளக்கமளித்தல் போன்றவை தலையாய கடமையாகும்.

வலுவிழந்த மனிதன் வாழ்விழந்து போவதைத் தடுப்பதற்காக தக்க தொழில்முறை சார்ந்த உரையாடல்களினால் உரிய இடத்துத் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களுக்கான வசதி களை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் தாதியரின் சேவைகள் ஒன்றாகக் காணக்கூடியதாக உள்ளது. முற்று முழுதான தாதிய பராமரிப்பின் மூலம் பெரும் பான்மையான நோய் நிலைகளி லிருந்து மீளவும், அதுபற்றிய விளக்கங்கள் மூலம் மக்களின் சந்தேகங்களைப் போக்கவும் தனிமனிதனின் தனித்துவத்தைப் பேணவும் சிறந்த ஆளுமைப் பண்புகளையும் நேர முகாமைத்துவத்தையும் கொண்டிருக்க வேண்டியது தாதிய சமூகத்துக்கு கட்டியமான ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலாத்தன்மை என்பது எல்லோரது வாழ்நாளிலும் ஒரு கால கட்டத்தில் ஏற்படுவது தவிர்கமுடியாது. இதற்கான காரணங்கள் ; அதன் தன்மை இலேசானது, நடுத்தரமானது, கடின மானது எனத் தரம்பிரிக்க முடியும். அந்தந்த தரங்களிற்கு ஏற்ப சிகிச்சை, பராமரிப்பு, புனருத்தார ணங்களை வைத்தியர், தாதியர் மற்றும் துணை மருத்துவக் குழுக்களின் உதவியுடன் புனருத்தாரண நிலையங்களினூடாகப் பெற்று சமூகத்தில் அவர்களும் நடமாடி தமது தேவைக ளைப் பூர்த்தி செய்து கொள்ள முடிகிறது. சமூகத்தி லுள்ளோரர்/ வலுவிழந்தோர் நடமாடு வதற்கான சாதனங்களை இன்றைய நவீன மாற்றங்களுக் கேற்ப சிறந்த முறையில் வடிவமைத்து பொது மக்களுக்கு வழங்கி இயலுமையை ஏற்படுத்தி தனது அளப்பரிய சேவையை நமது யாழ் மாவட்டத் திலும் யாழ். ஜெயப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் என்ற பெயரில் 28 ஆண்டுகளாக உச்ச பயன்பாட்டிற்காக வழங்கிக் கொண்டிருக்கின்றது. இதில் தாதியமும் சேர்ந்து கொண்டு, எவ்வாறு இந்த உதவிகளைப் பெற்றுக்கொள்வது; எப்படி இச் சாதனங்களைப் பயன்படுத்தி நடமாடுவது; அன்றாட முக்கிய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய் வது, சாதாரண வாழ்வுக்கான கல்வியூட்டல் என்ற பல்வேறு விடயங்களை மேற்கொள்ள உதவி புரிகின்றது.

தாதியம் இயலாதவர்களை அவரவர் இயலாத்தன்மையுடன் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள, கல்வி கற்க, தொழில் புரிய தேவை யான ஆலோசனைகளை வழங்கி அவர்களையும் சமூகத்தில் நடமாட ஊக்குவிக்கின்றது. வைத்திய சாலைக்கு நோயுற்றுவரும் நோயாளர்களைப் பராமரிக்கும் போது தனிநபராக மதித்து அவரவ ருக்கு தேவையான கவனிப்பை வழங்குவதுடன் அவர்களுக்கு நடமாட சாதனங்கள், தேவைப்படு மிடத்து வழிகாட்டி உதவுகின்றனர். எமது தாதிய கல்லூரி மாணவர்களும் தாதிய கற்கையின் போது யாழ். ஜெய்ப்பூர் நிறுவன தரிசிப்பை மேற்கொண்டு அங்கு நடைபெறும் செயற்பாடுகள், உற்பத்தி செய்யும் துணை சாதனங்கள் ஆகியவற்றை கண்ணால் பார்த்து விளங்கிக் கொள்கின்றனர். பின்னர் அது பற்றி விபரமாக தாம் சந்திக்கும் நோயா ளர், அவர்தம் உறவினர்களுக்குத் தெரியப்படுத்தி உதவுகின்றனர். தாதியர் தம் அளப்பரிய தாதிய சேவையினூடாக இயலாதவர்களின் பூரண தேவைகளை அன்பாகவும், இரக்கத்துடனும் நிறை வேற்றி அவர்கள் தாமாக தம்மைக் கவனிக்கவும், தமது வாழ்வாதாரத்துக்கு தேவையான வருமானம் தரும் சிறு கைத்தொழில்களை செய்வதற்கான பயிற்சி வழங்கியும் உதவுகின்றனர். இன்னும் இயலாத்தன்மை உடையவர்களை வைத்துப் பரா மரிக்கும் சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங் கள், விஷேட தேவையுடையோர் பராமரிப்பு நிலை யங்கள் இவற்றின் தாதியர் தன் சுகாதாரம், போஷாக்குணவு, பொழுது போக்கு, ஓய்வு, நித்திரை இவ்வாறான அளப்பரிய பணி புரிகின்றனர். இவர்களுக்கான பணியை நிறைவேற்றுவதற்கு வேண்டிய சாதனங்களைத் தயாரித்து வழங்கி வலுவிழந்தோரையும் சமூகத்தில் இயல்பாக நடமாட பேருதவி புரியும் யாழ். ஜெயப்பூர் நிறுவனம் சகல பணியாளர்களது சேவையும் போற்றுதற்கு ரியது. இங்கு பணிபுரியும் சகலரும் மிகவும் பாராட்ட கூடியவர்கள். எனவே இந்நிறுவனம் மென்மேலும் வளர்ந்து சமூகத்திற்கு அளப்பரிய சேவையாற்ற எல்லாம் வல்ல இறையருள் கிட்டும் என்பது திண்ணம்.

**"வாழ்க தாதியர் பணி! நலம் பெறுக சமூகம் ஓங்குக ! ஜெயப்பூர் நிறுவன சேவை !"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Work Performance
## For the Period July 1987 to May 2015

| | | |
|---|---|---|
| 1 | **PROSTHETIC SECTION** | **May 2015** |
| | Lower limbs fitted - Jaipur technology | **2897** |
| | Polypropylene Technology (from 1999) | **3334** |
| | Upper limbs fitted - Jaipur Technology | **123** |
| | Polypropylene Technology (from 1999) | **440** |
| | Foot pieces manufactured | **4224** |
| | Leather belts manufactured | **11803** |
| | Repairs done (Jaipur and Polypropylene) | **16234** |
| 2 | **ORTHOTIC SECTION** | |
| | Orthoses fitted (included KAFO & AFO) | **1954** |
| | Spinal supports and others | **335** |
| | Shoe modifications | **1088** |
| | Orther miscellaneous items | **480** |
| | Repairs done | **239** |
| 3 | **MOBILITY SECTION** | |
| | Tricycles (Normal & Special) | **800** |
| | Wheel chairs (Normal & Special) | **373** |
| | Number of arm crutches | **990** |
| | Number of elbow crutches | **2653** |
| | Steel walkers | **243** |
| | Walking aids | **265** |
| | Commode Stand (2010 - June 2014) | **61** |
| | World Made Wheel Chair (2009 - June 2014) | **319** |
| | Repairs | **402** |
| 4 | **PHYSIOTHERAPY SECTION** | |
| | No of patients seen | **4863** |
| | No of visits | **26002** |
| | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Blood donation for world disabled dy on 03-12-2014



CP Children in Mobile camp on 08-03-2015



DM book release



Farewell to Dr.Umapathy 02-06-2014



Paediatric clinic with CPLF Director



Rotary Governor visit on




Training in Sign language for the 5 members of the staff on 29-12-2014



Tricycle donation. sponsored by SKHT UK on 13-04-2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Mr.Anantharajah Piragash 20 years old. 2009/2/11 at the age of 14 years lost his right leg below the knee due to bomb blast. He was depressed because he was unable to stand or walk. His worry was mainly about his studies. He came to JJCDR and received prosthesis.

He received 5 prosthesis in all. Now he is following a course in hotel management. He plays cricket and he is a member of the sports club in his area. His ambition is to became a manager of a hotel.

Mast.Kirubakaran Danushan is a 15year old boy living in Araly.His Father is a mason. He is the 2nd child in the family. Danushan was born with meningomylocele and hydrocephalus.On the 5th day of birth he had surgery for meningomylocele. Later underwent treatment for hydrocephalus.After some time he noticed that he had tightness and weakness in both his lower limbs and was unable to stand or walk.He could not control his bladder and bowels. He had to depend on his mother for all the activities. He could not go to school or play with children of his age. He was seen by the orthopaedic surgeon who recommended physiotherapy, bilateral Knee Ankle Foot Orthsis, and a pair of pair of elbow crutches.Tricycle wasprovided by JJCDR. Now he attending school regularly. His report from school is very satisfactory. He is able to visit his relatives and play with his friends. He has good control of his bladder and bowel. Now he is happy. and his ambition is to became a teacher.





Mr.Nadesappillai Thurkatheepan 34years old graduate. He accidentally fell into a well in 2011 following which he had injury to his spine. He had weakness of both lower limbs, sensory impairement below the level of the hip, poor bladder & bowel contro. He underwent orthopaedic treatment. As recommended by orthopaedic surgeon he came to JJCDR and got physiotherapy and bilateral Knee Ankle Foot Orthosis. He continued the physiotherapy and his condition improved. He got movement in both feet. Later he fitted with bilateral Ankle Foot Orthosis (Articulated) . He had gait training. Now he is able to stand and walk with the Ankle Foot Orthosis and pair of elbow crutches.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Mr.Anthonippillai Jegan 34years old is the father of three children( one of them is Master Jegan) .He lost his limb during a bomb blast injury in January 2009. He could not support his family because he could not do fishing as before. From Vanni he shifted to Kodikamam wellfare centre with his family. He was brought to JJCDR by ICRC. He had the prosthesis fitted on the 6th of April 2009 .. Now he is doing fishing . He is happy that he can support his family and enjoy life as before.

